**கவனிக்க .**– *2015.04.17 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III) *மற்றும் பகுதி* IV *(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*
**கவனிக்க .**– *இவ்வர்த்தமானியின் பகுதி* VI *இல் 2014.12.31 ஆந் திகதி வரையான பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1912 - 2015 අප්‍රේල් මස 24 වැනි සිකුරාදා - 2015.04.24

*1912 ஆம் இலக்கம் – 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) – மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | – |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | – |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | – |
| மாகாண சபை அறிவித்தல்கள் | – |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | – |
| துணைவிதிகள் | – |
| பதவிகள் – வெற்றிடம் | – |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 734 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 749 |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | – |
| நானாவித அறிவித்தல்கள் | – |


**கவனிக்க .**– *பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்) சட்டமூலம் மற்றும் நிதிச் சட்டமூலம் ஆகியன 2015, மாச்சு 27 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பிகளாக பிரசுரிக்கப்படுகின்றன.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, மே மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## விவசாயத் திணைக்களம் - மேல் மாகாண சபை

ஹோமாகம (ஆண்) வல்பிட (பெண்) மாவட்ட விவசாய பயிற்சி நிலையங்களில் ஒரு வருட தொழிற்கல்வி விவசாயப் பயிற்சி பாடநெறி மற்றும் இணைந்த "துறைசார் உதவியாளர் (விவசாயம்)" தேசிய தொழில் தகைமை (NVQ 4) பயிற்சி நெறி 2015/2016 ஆம் ஆண்டுக்கு மாணவ, மாணவிகளை ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பம்

மேலே குறிப்பிடப்பட்ட பாடநெறிக்காக மாணவ, மாணவிகளிடமிருந்து விண்ணப்பப் படிவங்கள் மேல் மாகாண விவசாயப் பணிப்பாளரினால் கோரப்படுகின்றது. இப்பாடநெறியானது சிங்கள மொழி மூலம் நடைபெறும். அத்துடன் இது விவசாயப் பிரிவில் தொழில் வாய்ப்பு மற்றும் சுய தொழிலை அடிப்படையாகக் கொண்டு செயற்படுபவர்களை இலக்காகக் கொண்டது.

2. இப்பாடநெறி பிரயோக, மற்றும் எழுத்து மூலப் பயிற்சி ஒன்றாக நடாத்தப்படும் இந்தப் பாடநெறியை சிறப்பாகப் பூர்த்தி செய்யும் மாணவ மாணவிகளுக்கு மேல் மாகாண விவசாயத் திணைக்களத்தினால் சான்றிதழ் வழங்கப்படும். மேலும் மூன்றாம் நிலைக் கல்வி, மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் தேசிய தொழிற்பயிற்சி தகைமை (NVQ 4) சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்படும். பாடநெறியில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடங்கள் பின்வருமாறு :-

(NVQ 4) க்கு உரியவை

1. M-01 நிலப் பண்படுத்தல் மற்றும் மண் பாதுகாப்பு மேற்பார்வை
2. M-02 நடைமுறை மற்றும் தாவர நாற்றுக்கள் பராமரிப்பு மேற்பார்வை
3. M-03 துறையியல் ஸ்தாபனம் மற்றும் பயிர்கள் பராமரிப்பு மேற்பார்வை
4. M-04 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அறுவடை/செயலாக்க மேற்பார்வை
5. M-05 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் செயற்பாட்டுப் பராமரிப்பு மேற்பார்வை
6. M-06 நிர்வாக செயற்பாடுகள்
7. M-07 தொழில்சார் பாதுகாப்பு

மற்றும் மேலதிகமாக கால்நடை வளர்ப்பு, நெற்செய்கை, மனைப் பொருளியல், தொழில் முயற்சி

மேலே கூறப்பட்ட விடயங்களினூடாக பாடங்களை சமர்ப்பிக்கும் போது புதிய விவசாய தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு உரியதாக புதிய கண்டுபிடிப்புக்கள் (உதாரணம்:- விளைச்சல் தொழில்நுட்பம், மும்முறை செய்கை முறை), சுயதொழில் உபாய மார்க்கங்கள் (உதாரணம் :- நில அளவினை ஸ்தாபித்தல், பண்ணைக் கணக்கு, பண்ணை உபகரணங்களின் பராமரிப்பு மற்றும் உழவு இயந்திரத்தை செலுத்துவதற்கு பயிற்சி அழித்தல்) மற்றும் தகவல்களை தயாரித்தல், புதிய முறைகளுக்காக பயிற்சிகளை வழங்குதல் (உதாரணம்:- கணனிப் பாவனை) மேற்கொள்ளப்படும். அவ்வாறே மாணவ மாணவிகளின் ஆங்கில அறிவை மேம்படுத்த மற்றும் தற்போதைய தேவையாகக் காணப்படும் விவசாயக் கொள்கை தொடர்பாக அறிவொன்றினைப் பெற்றுக்கொடுப்பதுமாகும்.

**3. பாடநெறியினை நடாத்திச் செல்லுதல்.-**

ஒரு வருட காலத்தைக் கொண்ட பாடநெறியானது மூன்று தவணைகளைக் கொண்டது. இரண்டாவது தவணையின் இறுதியில் அதாவது மொடியூல் பயிற்சி பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் எழுத்து மற்றும் பிரயோக ரீதியான பரீட்சை நடைபெறும். மீண்டும் (மொடியூல்) கையேடு கால எல்லையினுள் தொடர்ச்சியாக மதிப்பீடு மேற்கொள்ளப்படும். முதலாவது மற்றும் இரண்டாவது தவணையினுள் கல்விச் சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மூன்றாவது தவணையில் ஒவ்வொரு மாணவ மாணவிகளும் தாம் தெரிவு செய்த விடய துறையினுள் வெளிவாரியான விவசாய இயக்கங்களுடன்/ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டு கருத்திட்ட செயற்பாடொன்றினை மேற்கொள்ள வேண்டும். அவ்விடயம் பூர்த்தியானதும் எழுத்து மற்றும் பிரயோக ரீதியிலான பரீட்சை நடைபெறும். பாடநெறியில் கலந்து கொள்வது 85□ ஆக இருந்து, தொடர்ச்சியான மதிப்பீட்டின் பின் மாணவ மாணவிகளுக்கு பாடநெறியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும். அவ்வாறே இந்த மாணவ மாணவிகளுக்காக மூன்றாம் நிலை கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் துறை சார்ந்த உதவியாளர் (விவசாயம்) (NVQ 4) தொழில் தொழிற்பயிற்சி தகைமைச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் பெற்றுக்கொடுக்கப்படும்.

**4. ஆட்சேர்ப்பு விதி முறைகள்.-**

**4.1 கல்வித் தகைமைகள்.-**

(i) கல்விப் பொதுத் தராதர சாதாரணப் பரீட்சையில் (சா./த.) சிங்கள மொழி (மொழி மற்றும் இலக்கியம்), கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வியும் தொழில்நுட்பமும் (விவசாயம், தையல்வேலை, வீட்டுத்தோட்டம், மனையியல், வர்த்தகமும் கணக்கியலும், மோட்டார் கைத்தொழில்) ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

*4.2* **பிற தகைமைகள்** :

(i) எல்லா விண்ணப்பதாரிகளும் விண்ணப்பம் கோரப்படும் திகதியன்று 17 தொடக்கம் 25 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்;

(ii) விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருக்க வேண்டும்;

(iii) பிரயோக ரீதியிலான விவசாய செயற்பாடுகளில் ஈடுபட சிறந்த உடல் தேகாரோக்கியம் பெற்றவராக இருக்க வேண்டும். (இதனை உறுதிப்படுத்துவதற்காக அரச வைத்திய அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் ஒன்று பாடநெறியின் ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்) ;

(iv) தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மேல் மாகாண விவசாயப் பணிப்பாளரினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் இருந்து தெரிவு செய்யப்படுவார்கள்.

(v) விவசாய செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த நபர்கள் மற்றும் அதனை தொழில் ஒன்றாக கொண்டு செல்வதற்கு ஆயத்தமாக உள்ளவர்கள் தொடர்பாக விஷேட கவனம் ஒன்று செலுத்தப்படும்;

(vi) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு முன் உள்ள மூன்று வருடங்களுள் ஆகக் குறைந்தது இரண்டு வருடங்களாவது மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசித்துள்ளார் என்பதற்கு வசிக்கும் பிரதேசத்திற்குரிய பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழினால் உறுதிப்படுத்த வேண்டும்.

இதற்கு மேலதிகமாக

கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள மேல் மாகாணத்தில் வசிக்காத நபர் ஒருவர் பாடநெறியைக் கற்பதற்கு விருப்பத்தை தெரிவித்தால் அவருக்கும் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். எவ்வாறான போதும் விண்ணப்பதாரிகளைத் தெரிவு செய்யும் போது மேல் மாகாணத்தில் வசிப்பவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். மேல் மாகாணத்தில் வசிப்பவர்களிடமிருந்து போதிய அளவு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படாதவிடத்து வெளி மாவட்டங்களின் விண்ணப்பதாரிகளை நேர்முகப்பரீட்சையின் மூலம் தெரிவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

5. **பாடநெறிக்குரிய ஊக்குவிப்புப் படி** :

(i) பயிற்சிக் காலத்தினுள், பயிற்சி நடவடிக்கைகளில் பங்கு பற்றும் ஒருவருக்கு இருநூற்றி ஐம்பது ரூபா (250 ரூபா) பயிற்சி நெறி ஊக்குவிப்பு படி செலுத்தப்படுவதுடன் அது உணவுப் பானங்களுக்காக செலவு செய்ய வேண்டி ஏற்படும்;

(ii) பயிற்சி பெறும் காலத்தினுள் எல்லா மாணவருக்கும் கட்டணமின்றி விடுதி வசதி வழங்கப்படும்.

*6.* **பாடநெறியில் கலந்து கொள்ளும் போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள்** :

(i) இருநூற்று ஐம்பது ரூபா (250 ரூபா) வைப்பு பணமாக வைக்க வேண்டும்;

(ii) பயிற்சியின் பின்னர் விவசாயத்தில் ஈடுபட அடிப்படை வசதிகள் சிறு அளவேனும் இருக்க வேண்டும்;

(iii) பயிற்சியின் பின்னர் அரச சேவையில் வேலை ஒன்றை வழங்க, மேல் மாகாண சபையோ மத்திய அரசோ கட்டுப்பட்டில்லை என்பது விஷேடமாக வலியுறுத்தப்படுகின்றது;

(iv) பயிற்சி பாடநெறி நடைபெறும் காலத்தினுள் தாபனத்தினால் பேணப்படும் பொதுச் சட்டதிட்டங்களுக்கு இணங்குவதாக எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும்;

(v) பயிற்சிப் பாடநெறி நடைபெறும் காலத்தினுள் ஒழுக்கமின்மை மற்றும் சட்டதிட்டங்களுக்கு முரணாக செயற்பட்டால் அங்கத்துவத்தை இரத்துச்செய்வதற்கு அதிகாரிகளினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

7. இங்கு கீழே காணப்படும் மாதிரிப் படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 8 1/2 □ 12 (ஏ4) அங்குல அளவிலான கடதாசியில் இரண்டு பக்கங்களை உபயோகித்து 2015, யூன் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் “மேல் மாகாண விவசாயப் பணிப்பாளர் (மேல் மாகாணம்), மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், இலக்கம் 154, பேராசிரியர் நந்ததாஸ கேதாகொட மாவத்தை, கொழும்பு 7” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “2015/2016 ஆம் ஆண்டுக்கான ஒரு வருட தொழில் பயிற்சி விவசாயப் பாடநெறிக்கான விண்ணப்பப் படிவம்” என்று எழுதி அனுப்ப வேண்டும்.

(i) ஆட்சேர்ப்பு தொடர்பான இறுதி முடிவு மேல் மாகாண விவசாயப் பணிப்பாளருக்கு உரியதாகும்;

(ii) ஒழுங்கற்ற தவறான விண்ணப்பப் படிவங்கள் எந்தவொரு அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்;

(iii) தற்போது பாடசாலையில் இருந்து விலகிச் சென்றுள்ள மாணவ மாணவிகள் ஆர்வம் காட்டுகின்றபடியால் நேர்முகப் பரீட்சையின் போது பாடசாலையை விட்டு விலகிச் சென்ற சான்றிதழ் கட்டாயமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்;

(iv) தாம் கல்வி பயின்ற பாடசாலை மற்றும் பிரதேசத்தின் நன்மதிப்பைப் பெற்ற ஒருவரிடமிருந்து அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு சான்றிதழ்கள், கல்வித் தகைமை மற்றும் வேறு தகைமைகளுக்குரிய சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பப்படவேண்டும்;

(v) தேசிய ஆள் அடையாள அட்டையுடன் கல்விச் சான்றிதழ் மற்றும் ஏனைய சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஐ. யூ. மெண்டிஸ்,
மாகாண விவசாயப் பணிப்பாளர்,
மேல் மாகாணம்.

மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் (மேல் மாகாணம்),
இல 154,
நந்ததாஸ கோதாகொட மாவத்தை,
கொழும்பு 07,
2015, ஏப்பிறல் .

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஹோமாகம (ஆண்) வல்பிட (பெண்) மாவட்ட விவசாய பயிற்சி நிலையங்களில் ஒரு வருட தொழிற்பயிற்சி விவசாயப் பயிற்சி பாடநெறி மற்றும் இணைந்த "துறைசார் உதவியாளர் (விவசாயம்)" தேசிய தொழில் தகைமை (NVQ4) பயிற்சி பாடநெறிக்காக 2015/2016 ஆம் ஆண்டுக்காக மாணவ, மாணவிகளை ஆட்சேர்க்கும் விண்ணப்பப் படிவம்**

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.
2. முதலெழுத்துடன் பெயர் :----.
3. (i) நிரந்தர முகவரி :----.
   (ii) வதிவிட மாவட்டம் :----.
4. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :-

5. முதலெழுத்துடன் பெயர் (ஆங்கிலத்தில்) :

6. (i) நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) :-

   (ii) வதிவிட மாவட்டம் :

   (iii) கையடக்க தொலைபேசி இலக்கம் :

   (iv) இல்லத் தொலைபேசி இலக்கம் :

7. பால் :
   பெண் ☐ ஆண் ☐
8. பிறந்த திகதி :
   ஆண்டு ☐ மாதம் ☐ திகதி ☐

8. (i) தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ii) அடையாள அட்டை வழங்கிய ஸ்தாபனம் மற்றும் திகதி :----.

9. தந்தை அல்லது பாதுகாவலர் பெயர் :----.

10. தந்தை அல்லது பாதுகாவலர் முகவரி :----.

11. கல்வித் தகைமை :

(அ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சை (------ ஆண்டு)

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

(ஆ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சை (------ ஆண்டு)

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

(இ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர) பரீட்சை (------ ஆண்டு)

| சித்தியெய்திய பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

12. பிற தகைமைகளும் வெளி ரீதியிலான செயற்பாடுகளும்
(i)
(ii)
(iii)

13. நீங்கள் உயர்கல்வி நிறுவனம் ஒன்றிலோ தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றிலோ/ தாபனம் ஒன்றிலோ பாடநெறிக்காகத் தெரிவு செய்யப்பட்டு உள்ளீரா? அப்படியாயின் அது தொடர்பான விபரத்தைக் குறிப்பிடுங்கள் :

மேலே கூறப்பட்ட தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். ஏதாவது தகவல் ஒன்று என்னைத் தெரிவு செய்த பின் தவறு என்று தெரியவந்தால் எந்தவொரு விசாரணையுமின்றி எனது பயிலுநர் நிலைமை இரத்தாகும் என்பதனையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

4-709

## மத்திய மாகாண அரச சேவையில் மொழிபெயர்ப்பாளர் சேவை தரம் I இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

1. மத்திய மாகாண அரசாங்க சேவை மொழிபெயர்ப்பாளர் சேவை தரம் I இல் நிலவும் 14 வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்காக தகைமையுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் இத்திறந்த போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமை வரிசை அடிப்படையில் சான்றிதழ்கள் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சையொன்றிற்கு உள்வாங்கப்பட்டு, தகைமையுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர். நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் அமுலுக்கு வரும் திகதி என்பன மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுதல் மற்றும் தேவையின் பொருட்டு அந்தந்த மொழி மூலங்களில் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பன தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவைச் சார்ந்ததாகும்.

2. ஆட்சேர்க்கப்படும் மொழிமூலங்கள் பின்வருமாறு :
(1) சிங்களம் - தமிழ்
(2) சிங்களம் - ஆங்கிலம்
(3) தமிழ் - ஆங்கிலம்

3. **அமைப்பும் வேதன அளவுத்திட்டமும்.**- 2007.08.24 ஆந் திகதிய 06/2006 (IV) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மொழிபெயர்ப்பாளர் சேவை தரம் I இன் சம்பளக் குறியீட்டு இலக்கம் MN 6-2006A ஆகும்.

மொழிபெயர்ப்பாளர் சேவை தரம் I இன் சம்பள அளவுத்திட்டம் : ரூபா 21,245 - 11 □ 365 - 15 □ 450 - ரூபா 31,645 ஆகும்.

4. **சேவை நிபந்தனைகள்.**-

(i) மத்திய மாகாண அரச சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், மத்திய மாகாண கௌரவ ஆளுநரால் 2004.10.15 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட மத்திய மாகாண மொழிபெயர்ப்பாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதந்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் நிபந்தனைகள், அச்சேவைப் பிரமாணக் குறிப்பில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள, இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள், தாபன விதிக்கோவை ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்ள் ஆகியவற்றுக்கு உட்பட்டு தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் மொழிபெய்ப்பாளர் சேவை தரம் I இற்கு நியமிக்கப்படுவர்.

(ii) இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நியமிக்கப்படுபவர்கள் 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதாகும். வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் உட்பட மத்திய மாகாண மொழிபெயர்ப்பாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதந்துரைக்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்ததன் பின்னர் சேவையில் நிரந்தரமாக்கப்படுவர்.

5. தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் கடமையை ஏற்றுக்கொள்வதற்கு முன் அரசாங்க வைத்திய அதிகாரி ஒருவரினால் மேற்கொள்ளப்படும் வைத்திய பரிசோதனைக்கு தோற்ற வேண்டும். பரீட்சார்த்தி தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கு உடல் ரீதியில் தகுதியுடையவரென உறுதிப்படுத்த முடியாவிடின் அவரது நியமனம் செல்லுபடியற்றதாகிவிடும்.

6. **தகைமைகள்.**-

(i) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல்;

(ii) க. பொ. த. (சா.த.) பரீட்சையில் அல்லது அதையொத்த பரீட்சையொன்றில் இரண்டாம் மொழிக்கு திறமை சித்தியொன்றை அல்லது இரண்டாம் மொழி தொடர்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய அதைவிட உயர் தகைமையொன்றைப் பெற்று முதலாம் மொழிக்கு திறமை சித்தியொன்றை பெற்றிருத்தல்.

அத்துடன்

(iii) (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்;

அல்லது

(ஆ) சட்டத்தரணிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

(இ) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் அல்லது பல்துறை தொழில்நுட்ப நிறுவனமொன்றில் வர்த்தகவியல் டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்

அல்லது

(ஈ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவம் தொடர்பான தேசிய டிப்ளோமா உயர் சான்றிதழைப் பெற்றிருத்தல்

அல்லது

(உ) மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு** : மேற்படி பட்டங்கள் அல்லது சான்றிதழ்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதியிலிருந்து செல்லுபடியாகுதல் வேண்டும்.

(iv) **வயதெல்லை**.- 2015.04.30 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச/மாகாண அரச சேவையில் நிரந்தர பதவிகளில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதன்று)

**குறிப்பு** : சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிப்பாடங்களில் இரண்டை பல்கலைக்கழகப் பட்டம் பெறும்போது சித்தியடைந்திருக்கும் இடத்து அத்தகைய தகைமையுடைய ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் ஏற்புடைய சம்பள அளவுத் திட்டத்தில் தொடக்க சம்பளத்தைப் பார்க்க இரண்டு சம்பள படிநிலையில் கூட்டிவைக்கப்படுவார்.

7. **பரீட்சைக் கட்டணம்**.- அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணமான 600 ரூபாவை மத்திய மாகாண சபை பிரதான செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவு வைக்கும் பொருட்டு மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பணமாக செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீள் செலுத்தப்படமாட்டாது.

8. **விண்ணப்பிக்கும் முறை**.-

(அ) இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய ஏ4 அளவு தாளின் இரு பக்கங்களையும் பாவித்து அதன் முதலாவது பக்கத்தில் இல. 1-4 வரையான விடயங்களும், 5-9 வரையான விடயங்கள் மறுபக்கத்திலும் 10-13 வரையான விடயங்கள் மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்குமாறு விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தினைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலங்களில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் மேலதிகமாக ஆங்கில மொழியில் குறிப்பிடப்படுதல் அவசியமானதாகும்.

(ஆ) பரீட்சார்த்தி எம்மொழியில் பரீட்சைக்குத் தோற்ற விரும்புகின்றாரோ அம்மொழியில் விண்ணப்பம் அமைதல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் கட்டளை அதிகாரம் பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பதவியை வகிக்கும் ஒருவர் அல்லது 240,360 ரூபாவிற்கு கூடிய ஆண்டுச் சம்பளத்தை பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் "செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல. 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி" என்ற முகவரிக்கு 2015.05.26 ஆந் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "மத்திய மாகாண அரச சேவையில் மொழிபெயர்ப்பாளர் சேவை தரம் I இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(உ) அரச மற்றும் மாகாண அரச சேவையின் கீழ் பணியாற்றும் அலுவலர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும். எவரேனுமொரு விண்ணப்பதாரர் அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறுமிடத்து அவர் தகுதியற்றவரெனக் கருதப்படுவார்.

(ஊ) குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும், முழுமையுறாத மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் சம்பந்தமாக இவ்வாணைக்குழு பொறுப்புக் கூறமாட்டாது.

9. **பரீட்சைக்கு அனுமதி**.-

(அ) இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகள் அனைவரும் இப்பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படுவர். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டமை பரீட்சார்த்தி இப்பதவிக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது. பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பின் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தேவையான தகைமைகளை அவர்கள் கொண்டிருக்கவில்லையெனில் அவர்களின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் வேண்டப்பட்டுள்ள தகைமைகளை இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அல்லது அதற்கு முன் பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமாகும்.

*10.* ***பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.***- பரீட்சார்த்திகள் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதன் பொருட்டு ஒவ்வொரு பாடத்தின் போதும் கீழ்குறிப்பிட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

*11.* ***பொய்யான தகவல்களுக்கான தண்டனை.***- பரீட்சையின் முன்னர், பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் ஆகிய எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் யாதாயினும் விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகுதியற்றவரென உறுதி செய்யப்படும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத்தன்மை இரத்து செய்யப்படும். மேலும், விண்ணப்பதாரர் ஒருவர் அறிந்த உண்மைக்கு மாறானதொரு தகவலை சமர்ப்பித்திருப்பதாக அவர் நியமனம் செய்யப்பட்டதன் பின் உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

*12.* ***பரீட்சை முறை.***- இப்பரீட்சையானது எழுத்து மூலப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை ஆகிய இரு பகுதிகளாக நடாத்தப்படும்.

| பாடம் | புள்ளிகள் | காலம் |
|---|---|---|
| 1. மொழிபெயர்ப்பு | 100 | 3 மணித்தியாலம் |
| 2. ஆங்கில மொழி | 100 | 1 1/2 மணித்தியாலம் |
| 3. சிங்கள மொழி | 100 | 1 1/2 மணித்தியாலம் |
| 4. தமிழ் மொழி | 100 | 1 1/2 மணித்தியாலம் |
| 5. கிரகித்தல் | 100 | 1 1/2 மணித்தியாலம் |

*12.1* ***எழுத்து மூலப் பரீட்சை.***- இதற்கான வினாத்தாள் பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும்.

*12.1.1* ***பாடத்திட்டம்.***-

(1) மொழிபெயர்ப்பு.- அலுவலக ஆவணம், அறிக்கை அல்லது செய்திப் பத்திரிகை அல்லது அறிக்கை ஒன்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகள் உட்பட்ட அலுவலக, விஞ்ஞான, சட்டத்துறை சார்ந்த, தொழில்நுட்ப விடயங்கள் சம்பந்தமான ஆவணங்கள், இலக்கிய நூல்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட அரிதான சொற்றொடர்களை பின்வரும் யாதேனும் முறை ஒன்றிற்கு இணங்க மொழிபெயர்த்தல்.

(i) சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கும் தமிழ் மொழியிலிருந்து சிங்களத்திற்கும் ;
(ii) சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கும் ஆங்கில மொழியிலிருந்து சிங்களத்திற்கும் ;
(iii) தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கும் ஆங்கில மொழியிலிருந்து தமிழுக்கும் (மொழிபெயர்ப்பின் போது உயர் திறமை எதிர்பார்க்கப்படும்).

*குறிப்பு.- சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி வினாத்தாள்கள்.*- இதன் பொருட்டு மும்மொழிகளிலும் வினாத்தாள்கள் தயார் செய்யப்படுவதுடன் அவற்றில் தனக்குரித்தான இரண்டு மொழி வினாத்தாள்களுக்கு பரீட்சார்த்திகள் தோற்ற வேண்டும்.

(2) ***ஆங்கில மொழி*** : கட்டுரைகளில் தரப்படும் சொற்களின் கருத்து தெளிவாகும் வகையில் அச்சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் அமைத்தல், மரபுச் சொற்றொடர்களுக்கு கருத்து விளக்கம் கூறல், தொடர் மற்றும் சிக்கலான வாக்கியங்களை பகுத்தாய்தல்.

(3) ***சிங்கள மொழி*** : கட்டுரை எழுதல், சுருக்கம் எழுதல், கொடுக்கப்பட்ட ஒரு பகுதியை சுருக்கி அவரது சொந்த மொழிநடையில் எழுதல், சொற்களின் கருத்துத் தெளிவாகும் வகையில் அச்சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் அமைத்தல், வாக்கியங்களில் உள்ள இலக்கணப் பிழைகளை திருத்தல், மரபுச் சொற்றொடர்களை உணர்ந்து கொள்ளல்.

(4) ***தமிழ் மொழி*** : கட்டுரை எழுதல், சுருக்கம் எழுதல், கொடுக்கப்பட்ட ஒரு பகுதியை சுருக்கி அவரது சொந்த மொழிநடையில் எழுதல், சொற்களின் கருத்துத் தெளிவாகும் வகையில் அச்சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் அமைத்தல், வாக்கியங்களில் உள்ள இலக்கணப் பிழைகளை திருத்தல், மரபுச் சொற்றொடர்களை உணர்ந்துக் கொள்ளல்.

(5) ***கிரகித்தல்***: சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தயார் செய்யப்படும் கிரகித்தல் வினாப்பத்திரத்தின் பொருட்டு தாம் விரும்பும் ஒரு மொழியில் விடையளிக்க பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்படும்.

இதன் பொருட்டு பகுதிகளின் தொகுப்பொன்று பரீட்சார்த்திக்கு கொடுக்கப்படும். சில பகுதிகள் சம்பந்தப்பட்ட வரையில் பரீட்சார்த்திக்கு மாற்றுக் கூற்றுகளின் தொகுதியொன்று கொடுக்கப்படும். இவற்றுள் ஒன்று பகுதியின் உள்ளடக்கத்துடன் நன்கு பொருந்துவதாக இருக்கும். பொருத்தமான கூற்றைத் தேர்ந்தெடுக்கும்படி பரீட்சார்த்தி கேட்கப்படுவர். ஏனைய பகுதிகளைக் பற்றிய வகையில் பரீட்சார்த்தி பகுதியின் அர்த்தத்தை எவ்வளவு தூரம் விளங்கிக் கொள்கின்றார் என்பதை பரீட்சிப்பதற்கேற்ப வினாக்கள் தயாரிக்கப்படும்.

**குறிப்பு**.- தெளிவற்ற கையெழுத்துக்களுக்கும் சொற்பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். வாசிக்க முடியாத எழுத்துக்களை கொண்டிருக்கும் பரீட்சார்த்தியொருவரின் தகைமை இரத்துச் செய்யப்படலாம்.

12.1.2. ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் குறைந்தபட்சம் 40 புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளுக்கிடையில் குறித்த புள்ளிகளின் திறமை ஒழுங்கின் பேரில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கேற்ப நியமனங்கள் வழங்கப்படும்.

12.2. **நேர்முகப் பரீட்சை**.- தகைமைச் சான்றிதழ்களையும் தேகாரோக்கிய நிலையையும் பரிசோதிப்பதற்காக மட்டுமே நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அதன் பொருட்டு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

13. பரீட்சார்த்திகள் அனைவரும் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்வதற்கு முன்பாக வர்த்தமானி அறிவித்தலை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். உரிய குறியீடுகளை சரியாகக் குறிக்க வேண்டும். தவறுகள் பிழைகளை திருத்துவதற்காக செய்யப்படும் வேண்டுதல்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தினதும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் நிழற்படப் பிரதிகளை தம்வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

14. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்குரியதாகும்.

ஆர். எம். என். ரத்நாயக்க,
செயலளார்,
மாகாண அரச சேவைகள் ஆணைக்கு,
மத்திய மாகாண சபை.

மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி,
2015, ஏப்பிறல் 1.
இணையத்தள முகவரி : www.psc.cp.gov.lk

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண அரச சேவையில் மொழிபெயர்ப்பாளர் சேவை தரம் I இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை**

(அலுவலக உபயோகத்திற்கு)

1. நீர் பரீட்சைக்கு தோற்றுவது மொழிபெயர்ப்பாளர் சேவையில் எந்தப் பதவிக்கு என்பதை குறிப்பிடவும் :----.
   (i) சிங்களம் - தமிழ் மொழிபெயர்ப்பாளர் - 01
   (ii) சிங்களம் - ஆங்கில மொழிபெயர்ப்பாளர் - 02
   (iii) தமிழ் - ஆங்கிலம் மொழிபெயர்ப்பாளர் - 03

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

2. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :----.
   (i) சிங்களம் - தமிழ் - 01
   (ii) சிங்களம் - ஆங்கிலம் - 02
   (iii) தமிழ் - ஆங்கிலம் - 03

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3. விண்ணப்பதாரரின்
   (i) முதலெழுத்துக்களை இறுதியாக குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   ஆங்கில பெரிய எழுத்தில் : உ-ம் : PERERA A.B.C.
   (ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
   (iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

4. (i) பிரவேச அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :
   (ii) பிரவேச அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
   (iii) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

(iv) அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

(v) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

(vi) தொலைப்பேசி இலக்கம் : | | | | | | | | | | |

5. (i) பால் ஆண் - 0
பெண் -1

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

(ii) நீங்கள் இலங்கைப் பிரசையா?

(iii) சிவில் அந்தஸ்து :
சிங்களவர் - 1
இலங்கைத் தமிழர் - 2
இந்தியத் தமிழர் - 3
முஸ்லிம் - 4
ஏனையோர் - 5

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

6. சிவில் அந்தஸ்து :
திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

7. (i) பிறந்த திகதி :
ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

(ii) 2015.04.30 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.

8. ஆட்சேர்ப்பு அறிவித்தலில் 6.0 ஆம் பந்தியின் பிரகாரம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக நீர் பெற்றுள்ள கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் :----.

(அ) (i) பட்டத்தின் அல்லது தகுதிச் சான்றிதழின் பெயர் ;
(ii) அச்சான்றிதழ் வழங்கிய நிறுவனத்தின் பெயர் ;
(iii) பட்டம் அல்லது மற்றைய சான்றிதழ்கள் வலுப்பெறும் திகதி ;
(iv) பட்டத்தைப் பெற்ற மொழி;
(v) பட்டத்தின்போது சித்தியெய்திய ஏனைய மொழிகள்:
(1) ---------
(2) ---------

(ஆ) (i) முதலாம் மொழியில் திறமைச் சித்தியெய்திய க. பொ. த. (சா. த.) பரீட்சை அல்லது அதையொத்த தகைமைகளைக் கொண்ட பரீட்சை :----.
ஆண்டு :-----.

(ii) இரண்டாம் மொழியில் திறமைச் சித்தியெய்திய க. பொ. த. (சா.த.) பரீட்சை அல்லது அதையொத்த தகைமைகளைக் கொண்ட பரீட்சை :----.
ஆண்டு :-----.

9. நீர் தற்போது அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கின்றீரா? ஆம்/இல்லை :----.
ஆம் எனின் -
பதவியின் பெயர் :----.
நியமிக்கப்பட்ட திகதி :----.
தற்போது சேவையாற்றும் நிறுவனம் :----.

10. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

| பற்றுச்சீட்டு பிரித்தெடுக்க முடியாதவாறு இங்கு ஒட்டப்படுதல் வேண்டும். |
|---|

11. இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ...... ஆம் இலக்க ....... ஆந் திகதிய பணப் பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக நடந்துகொள்ளவும், இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவர் என காணப்படின் பரீட்சையின் போதோ அல்லது அதன் பின்னரோ எனது பரீட்சார்த்தி உரிமை இரத்து செய்வதற்காக எடுக்கப்படும் தீர்மானத்திற்கு நான் உடன்படுகின்றேன்.

மேலும், இவ்விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன் வர்த்தமானி அறிவித்தலை நன்கு வாசித்து விளங்கிக் கொண்டேன் என்றும், குறியீட்டு இலக்கங்கள் மற்றும் தரப்பட்ட விபரங்களில் தற்செயலாக பிழைகள் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பின் அதற்குரிய விளைவுகளுக்கு நானே பொறுப்பாளி என்றும் அது சம்பந்தமாக மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கமாட்டேன் என்றும் உறுதி கூறுகின்றேன். மேலும் பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் தொடர்பான அனைத்து சட்டதிட்டங்களுக்கும் நான் கட்டுப்படுவேன் என்றும் இத்தால் உறுதியளிக்கின்றேன்.

-----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

12. **பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :**
இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் --------- என்ற முகவரியில் வசிக்கும் திரு./திருமதி/செல்வி --------- என்பவர் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரிந்தவர் எனவும் ---------- ஆந் திகதி அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

-----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயரும் பதவியும் :----.
முகவரி :----.
திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையால் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

**குறிப்பு**.- தற்போது அரச சேவையிலுள்ளவர்கள் தமது கையொப்பத்தை திணைக்களத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

13. **விண்ணப்பதாரி அரச அலுவலர் ஒருவராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**
இவ்விண்ணப்பதாரியினால் 7, 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளில் தரப்பட்ட தகவல்கள் சரியானவை எனவும் அவரது கடமை மற்றும் நடத்தை திருப்திகரமானதெனவும் இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும் உறுதிப்படுத்துகிறேன். அத்துடன் இப்பதவிக்காக அவர் தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிப்பதற்கு இயலும்/ இயலாது என்பதை அறியத்தருகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோக முத்திரையும்.

திகதி :----.
உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.

4-856

## மத்திய மாகாண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015

மத்திய மாகாண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காக தகைமையுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேற்றுக்கமைய திறமை அடிப்படையில் தகுதி பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் மத்திய மாகாண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

3. இதன் மூலம் நியமிப்பதற்கு உத்தேசித்துள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 10 ஆகும். நியமனம் அமுலுக்கு வரும் திகதி மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுதல் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவைச் சார்ந்ததாகும்.

4. **சம்பளம்**.- மத்திய மாகாண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3-III, 3-II, 3-I ஆம் தரங்களுக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம். ரூபா 14,425 - 10□145-11□170-6□240-14□320- ரூபா 23,665 (MT 1-2006-A) ஆகும். ரூபா 16,045 ஐக் கடந்து செல்வதற்காக தரம் II இற்கான தரமுயர்வும், ரூபா 17,985 ஐக் கடந்து செல்வதற்காக தரம் I இற்கான தரமுயர்வும் பெறுதல் வேண்டும்.

5. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதாகும்.

6. **தகைமைகள்**.- மத்திய மாகாண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும் :-

(அ) மத்திய மாகாண சபையின் அதிகாரப் பிரதேசத்தில் குறைந்தது 3 வருட நிரந்தர வதிவினைக் கொண்ட இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல்;

(ஆ) (i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்;

(ii) மத்திய மாகாண அரச சேவையில் நிரந்தர பதவிகளில் உள்ள தகுதியை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 45 வயதிற்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.

(இ) சிறந்த நன்னடத்தை மற்றும் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்;

(ஈ) மத்திய மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்படுதல் வேண்டும்;

(உ) **கல்வித் தகைமைகள்**.-

(1) மொழி, கணிதம், ஆங்கிலம் என்பன அடங்கலாக ஐந்து பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

(2) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (இங்கு பொது ஆங்கிலம் ஒரு பாடமாகக் கணிக்கப்படமாட்டாது).

(ஊ) **தொழில்சார் தகைமைகள்**.- தேசிய தொழில்சார் தகைமைகளில் (NVQ) 5 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்தில் கணினி/ தகவல் தொழில்நுட்பம் தொடர்பான கற்கை நெறி ஒன்றையேனும் தொடர்ந்திருத்தல்.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் உரிய தகைமைகளை விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அல்லது அதற்கு முன் பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமாகும்.

7. **பரீட்சை நடைமுறைகள்**.-

7.1 இப்பரீட்சையானது இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டதாக அமையும். இப்பரீட்சையானது சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

7.2 பரீட்சை பாடங்களும் ஒவ்வொரு பாடத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் கீழ்வருமாறு :

| பாடம் | புள்ளிகள் | காலம் |
|---|---|---|
| 1. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப எழுத்துப் பரீட்சை | 100 | 2 மணித்தியாலங்கள் |
| 2. உளச்சார்புப் பரீட்சை | 100 | 1 மணித்தியாலம் |
| மொத்த புள்ளிகள் | 200 | |

***தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப எழுத்துப் பரீட்சை.***- பரீட்சார்த்திகள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பாக கொண்டுள்ள பொது அறிவினைப் பரீட்சிப்பதற்கு ஏதுவான வகையில் பல்தேர்வு வினாக்களையும் சுருக்க வினாக்களையும் உள்ளடக்கியதாக இவ்வினாத்தாள் தயாரிக்கப்படும். இங்கு இயங்கு தளங்கள், மென்பொருட்கள், வன்பொருட்கள், சொல் செயலி, தரவுத் தளம், தரவுத் தள முகாமை, இணையத்தளம், மின்னஞ்சல் ஆகிய துறைகள் தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவு பரீட்சிக்கப்படுவதுடன் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

***உளச்சார்பு பரீட்சை.***- இங்கு பரீட்சார்த்தியின் எண்கணித ஆற்றல், பொது விவேகம், தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், பொது அறிவு என்பவற்றை பரீட்சிப்பதற்காக 50 பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாக வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

***குறிப்பு*** : கடமை நோக்கங்களுக்காக பரீட்சார்த்திகளின் தகைமையையும் ஆற்றலையும் பரீட்சிக்கக் கூடியதாக இவ்வினாப்பத்திரம் அமையும். இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருந்த போதிலும் நியமனத்திற்கான தகைமையைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40 வீதத்தையாவது பெறுவதுடன் பரீட்சைக்கான மொத்தப் புள்ளிகளில் 50 வீதத்தையாவது பெறுதல் வேண்டும். பெற்ற புள்ளிகளின் திறமை ஒழுங்குமுறை கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டு, போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை பூர்த்திசெய்யக்கூடியவாறு நியமனங்கள் வழங்கப்படும்.

*8.* ***பொய்யான தகவல்களுக்கான தண்டனை.***- விண்ணப்பப்படிவங்களை நிரப்புகின்ற போது சரியான தகவல்கள் வழங்குவது தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்துதல் வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைய, யாதாயினும் விண்ணப்பதாரர் ஒருவர், பரீட்சையின் முன்னர், பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் ஆகிய எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் இப்பதவிக்கு தகுதியற்றவரென உறுதி செய்யப்படும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத்தன்மை இரத்து செய்யப்படும். மேலும், விண்ணப்பதாரர் ஒருவர் அறிந்த உண்மைக்கு மாறானதொரு தகவலை சமர்ப்பித்திருப்பதாக அவர் நியமனம் செய்யப்பட்டதன் பின் உறுதி செய்யப்படும் பட்சத்தில் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

*9.* ***பரீட்சைக் கட்டணம்.***- அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணமான 600 ரூபாவினை மத்திய மாகாண சபை பிரதம செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவு வைக்கும் பொருட்டு மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பணமாக செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியினைத் தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்). செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீள் செலுத்தப்படமாட்டாது. காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ பரீட்சைக் கட்டணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

*10.* ***விண்ணப்பிக்கும் முறை.***- விண்ணப்பங்கள் ஏ4 (21□29 செ. மீ.) சாதாரண தாள்கள் அளவிலான கடதாசிகளை உபயோகித்து-

(i) இல. 1-4 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும்;

(ii) இல. 5 முதல் ஏனைய பந்திகள் அடுத்த பக்கத்திலும் உள்ளடங்குமாறு விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும்;

(iii) விண்ணப்பப்படிவங்களை தயாரிக்கின்றபோது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத, உரிய தினத்திற்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிராத, முழுமையுறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பங்கள் நிரப்பாது விடுவதால் ஏற்படும் பின்விளைவுகளை விண்ணப்பதாரர்களே பொறுப்பேற்றல் வேண்டும். உரிய விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதியினை தன்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். அறிவித்தலில் கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இணங்குமாறு விண்ணப்பப்படிவம் தயார் செய்யப்படுவதனை உறுதிப்படுத்துவது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும்.

(i) இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகள் அனைவரும் இப்பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படுவர். போட்டிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டமை பரீட்சார்த்தி இப்பதவிக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது. பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பின் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தேவையான தகைமைகளை அவர்கள் கொண்டிருக்கவில்லையெனின் அவர்களின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படும்.

(ii) விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மத்திய மாகாண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் கட்டளை அதிகாரம் பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பதவியை வகிக்கும் ஒருவர் அல்லது 240,360 ரூபாவிற்கு கூடிய ஆண்டுச் சம்பளத்தை பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

(iv) மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் “செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல. 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி” என்ற முகவரிக்கு 2015.05.26 ஆந் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

11. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாதவிடத்து, மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவிற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். (தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தினதும் காசு செலுத்திய பற்றுச்சீட்டினதும் பிரதிகள், பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டுடன் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றை குறிப்பிட்டு மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாகும்.

12. பரீட்சார்த்திகள் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதன் பொருட்டு கீழ்க்குறிப்பிட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

13. பரீட்சை நடாத்துவது தொடர்பில் மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்பட்டு நடப்பதற்கு பரீட்சார்த்திகள் கடமைப்பட்டுள்ளனர். அவ்வொழுங்கு விதிகளை மீறுமிடத்து மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக வேண்டி இருக்கும்.

14. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

15. இவ்வறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி வசனங்களுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படுமாயின் சிங்கள மொழி அறிவித்தலை சரியானதாகக் கருத வேண்டும்.

ஆர். எம். என். ரத்நாயக்க,
செயலாளர்,
மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்கு.

மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி.
இணையத்தள முகவரி : www.psc.cp.gov.lk

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015**

Open Competitive Examination for recruitment to Class 3 Grade III of the Central Provincial Information and Communication Technology Service - 2015

பரீட்சை இலக்கம் [ ]

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
(சிங்களம் - S, தமிழ் - T, ஆங்கிலம் - E) [ ]
(உரிய குறியீட்டை கூட்டினுள் இடவும்)

1. விண்ணப்பதாரரின்-

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :------.
(Mr./Mrs./Miss) (ஆங்கில பெரிய எழுத்தில்)

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(சிங்களத்தில்/தமிழில்)

1.3 முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் :----.
(ஆங்கில பெரிய எழுத்தில்)

1.4 முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் :----.
(சிங்களத்தில்/தமிழில்)

2. 2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்):----.
2.2 பிரவேச அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (சிங்களத்தில்/தமிழில்):----.
2.3 பிரவேச அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
2.4 தற்போது அரச சேவையில் இருப்பவராயின் அலுவலக முகவரி :----.
2.5 தொலைபேசி இலக்கம் :----.

3. 3.1 பிறந்த திகதி :
ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

3.2 விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதிக்கு வயது :
வருடங்கள் :----- மாதங்கள் :------ நாட்கள் :------

3.3 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

4. பால் : (ஆண், பெண்) :----.

5. 5.1 நிரந்தர வதிவிட மாவட்டம் :----.

| வாக்காளர் இடாப்பு பட்டியலின் அடிப்படையில் | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|
| தேர்தல் மாவட்டம் | | | |
| தேர்தல் தொகுதி | | | |
| வாக்காளர் பிரிவு | | | |
| கிராம அலுவலர் பிரிவு இல. | | | |
| வீட்டு இல. | | | |
| பெயருக்கு முன்னாலுள்ள தொடரிலக்கம் | | | |

6. கல்வித் தகைமைகள்:-
6.1 க. பொ. த. (சா.த.) பரீட்சையின் விபரங்கள் :

முதல் அமர்வு :
பரீட்சை ஆண்டு :----.
சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

இரண்டாம் அமர்வு :
பரீட்சை ஆண்டு :----.
சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

6.2 க. பொ. த. (உ.த.) பரீட்சையின் விபரங்கள் :
பரீட்சை ஆண்டு :----. சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

7. தொழில்சார் தகைமைகள்:-

| நிறுவனம் | பூர்த்தி செய்துள்ள கற்கை நெறிகள் | கால வரையறை | பெற்றுள்ள சித்திகள் | சான்றிதழ் திகதியும் இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|---|
| | | | | |

8. ஏனைய தகைமைகள்:----.

9. பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் விபரம் :----.
(i) பணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) திகதி :----.
(iii) பற்றுச்சீட்டின் இலக்கம் :----.

| பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும் |
|---|

**பரீட்சார்த்தியின் உறுதியுரை**

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை எனவும் சரியானவையெனவும் இதில் உள்ளடக்கப்பட்ட ஏதாவது விபரங்கள் பிழையாக காணப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னர் நான் தகுதியற்றவனாவேன் என்றும் பிழை நியமனத்திற்கு பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .................................. என்பவர் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரிந்தவர் எனவும் அவர் இன்று என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்தியவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்திய உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(அலுவலக முத்திரையால் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

*10. அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் தற்போது சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகள் சம்பந்தமாக பின்வரும் சான்றிதழைத் திணைக்களத் தலைவர் வழங்க வேண்டும்.*

*இவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ..................................... என்பவர் இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் ................. ஆக கடமையாற்றுகிறார். கடந்த 5 வருட காலப்பகுதியில் அவர் எந்த விதமான ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என்பதை தெரிவிப்பதுடன் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படின் அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்றும் ஒப்புதல் அளிக்கின்றேன்.*

-----,
*திணைக்களம்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்*
*(உத்தியோகப்பூர்வ முத்திரை).*

*திகதி :----.*

*4-857*

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**மேல்நீதிமன்றம் - யாழ்ப்பாணம்**

**பகிரங்க கேள்விகள் மூலம் விற்பனை செய்தல்**

*கீழே குறிப்பிடப்பட்ட நீதிமன்றங்களில் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத கீழே குறிப்பிடப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வது தொடர்பாகக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப் படிவங்களை 2015.05.18 ஆந் திகதி பி. ப. 2.30 வரை யாழ்ப்பாண மேல் நீதிமன்றக் கணக்குக் கிளையில் மீளளிக்க முடியாத வைப்பாக 100 ரூபாவை செலுத்தி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

*குறிப்பிடப்பட்ட வாகனங்களை குறிப்பிடப்பட்ட நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும். வாகனம் தொடர்பான விபரங்களும் மீளளிக்கக்கூடிய கேள்விப் பத்திர வைப்புத் தொகை போன்ற விபரங்களும் பின்வருமாறு :*

| | வாகன விபரம் | மீளளிக்கக்கூடிய வைப்பு (ரூபா) | நீதிமன்றத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1. | Mahendra Maximo (Red Colour - Small) | 5,000 0 | மாவட்ட/நீதிவான் நீதிமன்றம், ஊர்காவற்றுறை |
| 2. | Mahendra Maximo (White Colour - Small) | 5,000 0 | மாவட்ட/நீதிவான் நீதிமன்றம், மல்லாகம் |
| 3. | Bajaj Auto Re 2 Stroke | 2,000 0 | மாவட்ட/நீதிவான் நீதிமன்றம், மல்லாகம் |
| 4. | Bajaj Auto (AR 4S Green) | 2,000 0 | நீதிவான் நீதிமன்றம், சாவகச்சேரி |

*கேள்விப் பத்திரங்களைக் "கௌரவ மேல்நீதிமன்ற நீதிபதி, மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு தபால் உறையிலிட்டு ஒட்டப்பட்டு சீலிடப்பட்டு 2015.05.18 ஆந் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு முன்பாகக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக மேல்நீதிமன்றக் கணக்கீட்டுக் கிளையில் உள்ள கேள்விப் பெட்டியில் (Tender Box) இடுதல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் "நீதிமன்றத்தின் பெயரும் வாகனத்தின் விபரமும் கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திரம் - 2015" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.*

கே. சிவபாதசுந்தரம்,
மேல்நீதிமன்ற நீதிபதி/
மேல்நீதிமன்றப் பெறுகைக்குழு தலைவர்.

*மேல்நீதிமன்றம்,*
*யாழ்ப்பாணம்.*

*4-787*

---